# பிறந்தநாள் வாழ்த்து! - 12-01-2022

பிறந்தநாள் வாழ்த்து கூறும்
பெருமிதம் கொண்டு யானும்,
சிறந்ததோர் பாவைச் செய்ய
சிந்தையில் நிறைந்தபோது,
அறமாய்த் தமிழில் பெயரை,
அழகுடன் சூடினாலும்,
திறமாய்த் தமிழை அறிவாளோ?
அஜூயெனும் **கலைவாணி** யே!

ஆங்கிலத்தில் வாழ்த்தை அவளறிய
அழகுடன் சொல்லிடவே யெனக்கு,
பொங்கும் தமிழைப் போலொரு
ஆளுமை அமையவில்லை!
எங்கும் நிறைந்தாலும் அதிலே
எனக்கோர் பயிற்சி யில்லை!
சங்கடமின்றியே **அஜூ** வுக்கு
சாற்றும் **பிறந்தநாள் வாழ்த்து!**



